SP: 052872198

# தமிழ் இணையக் கல்விக்கழகம்
(முந்தைய தமிழ் இணையப் பல்கலைக்கழகம்)

# Tamil Virtual Academy
(Erstwhile Tamil Virtual University)

4580

முனைவர் வீ.ப. ஜெயசீலன், இ.ஆ.ப.
இயக்குநர் (மு.கூ.பொ.)

DIRECTOR OF MATRICULATION SCHOOLS CHENNAI 600 006

கடித எண். 341258/க/2021-02 நாள். 08.10.2021

பெறுநர்

இயக்குநர்
மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம்
டிபிஐ வளாகம், கல்லூரிச் சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600006.

பொருள் : த.இ.க. – நிலை 1 முதல் நிலை 5 வரைக்குமான (1 முதல் 12ஆம் வகுப்பு வரை) பாடத்திட்டங்கள் உருவாக்கம், பாடங்கள் எழுதுதல், பயிற்சி வகுப்புகள் முதலான பணிக்காக மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஆசிரியர்கள் விவரம் – தொடர்பாக.

தமிழ் இணையக் கல்விக்கழகத்தில் அயல்நாட்டில் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களுக்கு ஏற்றவாறு பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டு, அவை கல்வித் திட்டங்களின் கீழ்ச் சான்றிதழ், மேற்சான்றிதழ் மற்றும் பட்டம் வரை இணையம் வழியாக வழங்கப்பட்டு வருகின்றன. இக்கல்வித்திட்டத்தில் வழங்கப்பட்டு வரும் பாடத்திட்டங்களை மாற்றியமைக்கத் தீர்மானிக்கப்பட்டு, அயல்நாட்டில் வாழும் குழந்தைகளுக்கு இரண்டாம் மற்றும் மூன்றாம் மொழியாகத் தமிழ் மொழியைக் கற்கும் விதத்தில் நிலை 1 முதல் நிலை 5 வரைக்கும் (1 முதல் 12 ஆம் வகுப்பு வரை) கலைத்திட்டம், பாடத்திட்டங்கள் மற்றும் பாடங்கள் உருவாக்கும் பணியை, மாணவர்களின் திறனை அறிந்த அனுபவம் வாய்ந்த மெட்சிகுலேசன் பள்ளியில் பணிபுரியும் தமிழ் ஆசிரியர்களைக் கொண்டு மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

Anna University Campus, Gandhi Mandapam Road, Kottur, Chennai - 600 025.
Tel : 91-44-2220 9400, Fax : 91-44-2220 9405, E-mail: tva@tn.gov.in, URL: www.tamilvu.org

5. ஒவ்வொரு பாடங்களும் ஒரு பக்கத்திற்கு 25 முதல் 30 வரிகள் கொண்டதாகவும், குறைந்தபட்சம் 25 பக்கங்கள் கொண்டு இருத்தல் வேண்டும்.

6. ஒவ்வொரு பாடப்பொருள்களுக்கேற்ற பயிற்சிகள் வழங்க வேண்டும்.மேலும், மாணவர்கள் தானாகக் கற்கும் வகையில் பாடத்தில் இடம்பெறாத பொருண்மைகள் அடிப்படையிலும் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

7. பாடங்கள் "TAU-Marutham" என்ற யூனிகோட் எழுத்துருவில் 11 அளவில் தட்டச்சுச் செய்யப்பட்டிருக்க வேண்டும். கையெழுத்துப் பிரதிகள் ஏற்க இயலாது. எழுத்துருவை http://www.tamilvu.org/ta/tkbd-index-341488 இவ்விணைப்பில் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

8. த.இ.க.வால் குறிப்பிடப்படும் பாட அமைப்பிற்கேற்றவாறு பாடங்கள் எழுதப்பட வேண்டும்.

9. பாடங்கள் இறுதி செய்த பின்னரே பாடங்களுக்கான ஊதியம் வழங்கப்படும்.

ஒப்பம்
இயக்குநர் (மு.கூ.பொ.)

//உண்மை நகல்//

இயக்குநருக்காக